European Union

## இணைந்த அறிக்கை

*பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ரொமேனியா தூதரகங்கள் மற்றும் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடனான உடன்படிக்கையின் பிரகாரம் பின்வரும் அறிக்கையை ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு வெளியிடுகின்றது.*

ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தலைமை அதிகாரிகளுடன் நாட்டில் தூக்கு தண்டனை அமுல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் விஜயம் செய்திருந்தனர்.

இந்த சந்திப்பின் போது, தூக்கு தண்டனை நாட்டில் அமுல்படுத்தப்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் அங்கத்துவ நாடுகளின் கடும் எதிர்ப்பை ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தலைமை அதிகாரிகள் வெளிப்படுத்தியிருந்தனர்.

தூக்குத் தண்டனையை முற்றாக இல்லாமல் செய்வது தொடர்பில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் மேலும் வலியுறுத்தியிருந்தனர்.

கொழும்பு, 18 ஜுலை 2019

###

Contacts:
Political, Trade and Communications Section
Delegation of the European Union to Sri Lanka and the Maldives
Tel: + 94 11 2674413-4